**சுற்றுலாத்துறை வளங்கள் முன்னேற்றச் செயற்திட்டம் - 2013**

சுற்றுலாத்துறை வளங்கள் முன்னேற்றச் செயற்திட்டத்தின் (ரீஆர்ஜபி) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் (ஜீஓஎஸ்எல்) தற்போது ஜப்பான் சர்வதேச ஒருங்கிணைப்பு முகவர் (ஜேஐசீஏ) என்று அறியப்படும் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பானிய வங்கிக்கும் (ஜேபீஐசீ) இடையில் 2006 மார்ச் 28 இல் கைச்சாத்திடப்பட்ட எஸ்எல் - பீ 86 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையின் 4(8) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

சுற்றுலாத்துறை வளங்கள் முன்னேற்றச் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் செயற்திட்ட அமுலாக்கல் பகுதியின் மா நகர சபைகள், மேல் மாகாண வீதி அிபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மத்திய கலாசார நிதியம் மற்றும் வடமத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி திணைக்களம் என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. சுற்றுலாத்துறை வளங்கள் உட்கட்டமைப்பு கொழும்பு, கண்டி, நீர்கொழும்பு, நுவரெலியா, சிகிரியா, மற்றும் அநுராதபுரத்தில் மனித வள அபிவிருத்தி மற்றும் ஜப்பானில் சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் என்பவற்றின் ஊடாக சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி என்பவற்றின் மூலம் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பு செய்வதே செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 3,128 மில்லியனானதுடன் அதில் ரூபா 2,346 மில்லியன் அல்லது 75 சதவீதம் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவரால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2006 மார்ச் 28 இல் தொடங்கியிருந்ததுடன் 2012 திசெம்பர் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. செயற்திட்ட நடவடிக்கைகள் 2013 மே மாதத்தில் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன..

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்தநிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின்

வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அத்துடன் செயற்திட்டத்திற்கு அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்பொறுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலிவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழான பற்றுதல்கள், கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளிற்கிணங்க மேற்கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலிற்காக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் அடிப்படையில் நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(எ) விசேட கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரம்பல்கள் என்பன செயற்த்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டதா என்பதுடன், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத் திகதியில்லுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கேடுகளுடன் திருப்திகரமாக இணக்கஞ் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது கடந்த ஆண்டின் கணக்காய்வறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விடயங்களைச் சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான படிமுறைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுடன் இணங்கப்பட்டிருந்தனவா என்பதுமாகும்,

3. **அபிப்பிரயாம்**

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களுற்குகிணங்கவும் இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழக்கூடிய சீராக்கங்களைத் தவிரவும்

(அ) செயற்திட்டம் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான விசேட கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரம்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப் பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத் திகதியில்லுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கேடுகளுடன் திருப்திகரமாக இணக்கஞ் செய்யப்பட்டிருந்தது என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது (எஸ்ஓஈஎஸ்) அவை கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பங்களிற்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கைகொள்ள முடியுமென்றும்

(உ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட முறைப்பாடுகளைச் சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான படிமுறைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

4 **நிதிக் கூற்றுக்கள்**

4.1 **நிதிசார் செயலாற்றல்**

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி மீளாய்வாண்டிற்கான செயற்திட்டச் செலவினம் ரூபா 882 மில்லியனாக உள்ளதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 3,700 மில்லியனாகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| செலவினத்தின் வகுதி | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
| சிவில் வேலைகள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | 451.60 | 186.10 | 2,177.97 |

| | | | |
|---|---|---|---|
| இயலளவைக் கட்டியெழுப்பல் நிகழ்ச்சித்திட்டம் | 32.25 | 76.62 | 209.07 |
| சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | - | 7.75 | 28.65 |
| ஜப்பானில் சுற்றுலாத்துறை சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் | 357.35 | 114.44 | 474.76 |
| ஆலோசனை சேவைகள் | 7.00 | 0.37 | 337.45 |
| வட்டி மற்றும் சேவைக் கட்டணங்கள் | 10.55 | 25.51 | 83.09 |
| நிருவாக கிரயம் | 23.25 | 43.32 | 389.33 |
| | 882.00 | 454.11 | 3,700.32 |

**4.2 விசேட கணக்கு**

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான விசேட கணக்கின் செயற்பாடுகள் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி என்பன கீழே தரப்படுகின்றன.

| | **ஜப்பான் யென்** | **ரூபா** |
|---|---|---|
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 83,058,682 | 122,918,543 |
| கூட்டு:- | | |
| மீள் நிரப்பல்கள் | 301,999,807 | 385,825,637 |
| | 385,058,489 | 508,744,180 |
| கழி:- | | |
| பற்றுதல்கள் | 379,821,534 | 499,368,552 |
| ஜேபீஜசீ இற்கு செய்யப்பட்ட மீள்நிதியளிப்பு | 5,236,955 | 6,663,502 |
| வெளிநாட்டு நாணயமாற்று நட்டம் | - | 2,712,126 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | இல்லை | இல்லை |

## 5. கணக்காய்வு அவதானிப்புகள்

### 5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐந்தொகையில் காட்டப்பட்ட ரூபா 416,038,327 பெறுமதியான சிவில் வேலைகள் நிதிக் கூற்றுக்களிற்கான நேரொத்த குறிப்புக்களில் காட்டப்பட்ட ரூபா 411,443,718 தொகையான மீதியுடன் உடன்பட்டிருக்கவில்லை. ரூபா 4,594,609 ஆன வித்தியாசம் விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டமானது மீளாய்வாண்டின் போது ஜேபீஜசீ இற்கு ரூபா 6,663,502 இற்கு சமமான ஜப்பான் யென் 5,236,955 மீள்நிதியிடப்பட்டிருந்ததுடன் இது வெளிநாட்டு நாணயமாற்று நட்டமாக நிதிக்கூற்றில் சீராக்கப்பட்டிருந்தது. மேலும், ஐந்தொகையில் காட்டப்பட்ட ரூபா 368,883 தொகையான மொறகஸ்வேவா- சிகிரியா வீதியின் நிர்மாணம் தொடர்பில் ஏற்பட்ட வெளிநாட்டு நாணயமாற்று நட்டம் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஐந்தொகையில் மூலதனமாக்கப்பட்டு காட்டப்பட்ட ரூபா 23,021,845 கடன்பெறல் கிரயத்தின் மீதி இரட்டைக் கணக்கீடு காரணமாக முதலீட்டுக் கிரயம் ரூபா 10,050,705 ஆல் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

## 6. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டின் போதான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான குறிப்பிடத்தக்க சில புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | கடனின் கீழ் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|
| | | | | 2013 ஆம் ஆண்டிற்கானது | 2013 திசெம்பர் 31 வரை |
| | ஜப்பான் யென் (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) |
| ஜேஐசீஏ | 2,604 | 2,346 | 892.43 | 863.93 | 3,316.20 |
| இலங்கை அரசாங்கம் | 868 | 782 | 73.00 | 68.54 | 424.84 |
| மொத்தம் | 3,472 | 3,128 | 965.43 | 932.47 | 3,741.04 |

ரூபா 3,741.04 மில்லியன் தொகையான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்திய நிதிகள் அத்திகதியில் உள்ளவாறு ரூபா 3,700.32 மில்லியன் தொகையான திரண்ட செயற்திட்ட செலவினத்துடன் உடன்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 932.47 மில்லியன் தொகையான மீளாய்வாண்டின் போது பயன்படுத்திய நிதிகள் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டவாறு மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட ரூபா 802 மில்லியன் கிரயத்துடன் உடன்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், அத்தகைய வித்தியாசங்களிற்கான காரணங்கள் கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.2 பௌதீக செயலாற்றல்

2012 திசெம்பர் 31 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2013 மே மாதத்தில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உரிய நிறுவனத்திற்கு ரூபா 51,964,914 பெறுமதியான சொத்துக்களை மாற்றுவதற்கும் ரூபா 4,852,272 தொகையான பொறுப்புக்களை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகையில் தொடர்ச்சியாக காட்டப்பட்டது.